THE HINDU

24 APR 2024




# SC to pass directions in EVM-VVPAT case today

The Supreme Court is scheduled on Wednesday to pass directions on petitions seeking 100% cross verification of vote count in electronic voting machines (EVMs) with Voter Verifiable Paper Audit Trail (VVPAT) paper slips. A Bench headed by Justice Sanjiv Khanna had reserved the case for judgment on April 18. The petitioners, including the Association for Democratic Reforms, had argued that 97 crore registered voters in the country had a right to a more transparent electoral system, with or without EVMs. The Election Commission had countered that EVMs were "perfect".

THE HINDU

24 APR 2024

# 'Grant a paid holiday to staff from States going to polls'

**The Hindu Bureau**
CHENNAI

The Tamil Nadu government has requested commercial establishments and shops to grant a paid holiday to all their staff, who are registered voters in Andhra Pradesh, Kerala and Karnataka on days that these States are going to the polls. For complaints, employees can contact the State-level control room: D. Vimalanathan, Joint Commissioner of Labour, State-level coordinator (9445398801, 044-24335107) or Assistant Commissioners of Labour (Enforcement) M. Venkatachalapathy, (7010275131, 044-24330354), Subhash Chandran (8220613777, 044-24322749) and Sivakumar (9043555123, 044-24322750).

In Chennai, the district-level control room can be contacted at: Deputy Inspectors of Labour C. Vijayalakshmi (9840829835, 044-24330354), E. Ekambaram (9790930846, 044-24330354) and R. Vedhanayaki (9884264814, 044-24330354).

THE HINDU
24 APR 2024

# Turnout in 8 LS seats without BJP nominees exceeds State's average

Of these seats, Dharmapuri finished at the top with a turnout of 81.2%. Kallakurichi followed with 79.21% and Salem with 78.16%. PMK's Sowmiya Anbumani, AIADMK's R. Kumaraguru and DMK's T.M. Selvaganapathi were in the fray in these seats

T. Ramakrishnan
CHENNAI

Eight out of 10 Lok Sabha constituencies, wherein the fight was between only the DMK and the AIADMK without a candidate of the BJP in the fray, saw a higher turnout than the State's average in the recent general election, the polling for which was held on April 19.

This is based on an analysis of turnout data in constituencies wherein at least two of the three lead parties – the DMK, the AIADMK and the BJP – or their coalition partners fielded their nominees. As many as 31 out of 39 constituencies in the State fall under this category. For the purpose of the analysis, all those who contested on the symbols of the three parties have been considered.

Of those eight seats, Dharmapuri naturally finished at the top, registering 81.2%, as it has the distinction of having recorded the State's highest turnout. Kallakurichi followed with 79.21% turnout and Salem, 78.16%.

Known faces such as Sowmiya Anbumani of the PMK in Dharmapuri, R. Kumaraguru of the AIADMK in Kallakurichi and T.M. Selvaganapathi of the DMK in Salem were in the fray. In all the 10 seats where the BJP did not contest, its allies put up their nominees. Outliers to this group are Sriperumpudur and Thoothukudi, in both of which prominent candidates – the ruling party's T.R. Baalu and Kanimozhi Karunanidhi – were in the fray. The fact that the former constituency is the largest in the State with around 23.8 lakh electors has to be considered too, while examining the turnout data.

## Delving deeper

**Tamil Nadu recorded a turnout of 69.72% in the Lok Sabha polls, which concluded on Friday.** Decoding the voting pattern in constituencies where the stakes were high



Note: The selection of constituencies is based on the direct participation of at least two of the three lead parties of the three coalitions

| Constituency | DMK v AIADMK v BJP | AIADMK v BJP (without DMK) | DMK v BJP (without AIADMK) | DMK v AIADMK (without BJP) |
|---|---|---|---|---|
| Chennai North | 60.11 | – | – | – |
| Chennai South | 54.17 | – | – | – |
| Chennai Central | – | – | 53.96 | – |
| Sriperumpudur | – | – | – | 60.25 |
| Kancheepuram | – | – | – | 71.68 |
| Arakkkonam | – | – | – | 74.19 |
| Vellore | 73.53 | – | – | – |
| Krishnagiri | – | 71.5 | – | – |
| Dharmapuri | – | – | – | 81.2 |
| Tiruvannamalai | 74.24 | – | – | – |
| Arani | – | – | – | 75.76 |
| Kallakurichi | – | – | – | 79.21 |
| Salem | – | – | – | 78.16 |
| Namakkal | 78.21 | – | – | – |
| Erode | – | – | – | 70.59 |
| Tiruppur | – | 70.62 | – | – |
| Nilgiris | 70.95 | – | – | – |
| Coimbatore | 64.89 | – | – | – |
| Pollachi | 70.41 | – | – | – |
| Karur | – | 78.7 | – | – |
| Perambalur | 77.43 | – | – | – |
| Chidambaram | – | 76.37 | – | – |
| Nagapattinam | – | 71.94 | – | – |
| Thanjavur | – | – | 68.27 | – |
| Sivaganga | – | 64.26 | – | – |
| Madurai | – | 62.04 | – | – |
| Theni | – | – | – | 69.84 |
| Thoothukudi | – | – | – | 66.88 |
| Tenkasi | 67.65 | – | – | – |
| Tirunelveli | – | 64.1 | – | – |
| Kanniyakumari | – | 65.44 | – | – |

**This is based on an analysis of turnout data in Lok Sabha constituencies wherein at least two of the three lead parties – the DMK, the AIADMK and the BJP – or their coalition partners fielded their nominees this poll**

Of 10 constituencies that saw all the lead parties in the fray, six exceeded the State's average. Two Chennai seats – North and South – are among the four that have not crossed the overall figure-mark.

Of nine constituencies where the DMK gave way for its allies to contest in, five recorded a higher turnout.

### DMDK's two seats

Whereas, the two seats where the DMDK, an ally of the AIADMK, contested, the turnout did not even touch the State average.

THE HINDU
24 APR 2024

# EPS says PM's remarks on Muslims 'unacceptable'; Jawahirullah writes to EC

The Hindu Bureau
CHENNAI



> It will be in the interest of the nation that leaders avoid articulating objectionable views that will otherwise cause apprehension among Muslims
>
> EDAPPADI K. PALANISWAMI
> AIADMK general secretary

AIADMK general secretary Edappadi K. Palaniswami on Tuesday came out against Prime Minister Narendra Modi's recent speech in Rajasthan concerning Muslims.

Pointing out that Mr. Modi had spoken in a "controversial manner," Mr. Palaniswami said that expressing such a controversial opinion would not augur well for the country's sovereignty.

It would be in the interests of the nation and communal harmony that political leaders avoided articulating objectionable views that would otherwise cause apprehension among Muslims. It was "unacceptable" to make a comment that would offend the sentiments of the community, he said.

### Plea to EC

Meanwhile, Manithaneya Makkal Katchi president M.H. Jawahirullah has written to the Chief Election Commissioner, Rajiv Kumar, seeking disqualification of Mr. Modi and a ban on his campaign in respect of the speech.

In a letter to the Election Commission (EC), Prof. Jawahirullah quoted Mr. Modi as saying, "The Congress manifesto says they will calculate the gold with mothers and sisters, get information about it, and distribute that property. They will distribute it to whom? Manmohan Singh's government had said Muslims have the first right on the country's assets. It will be distributed among those who have more children. It will be distributed to the infiltrators. Should your hard-earned money go to the infiltrators? Do you approve of this?..."

According to Prof. Jawahirullah, "the vicious and insidious speech" calling Indian Muslims infiltrators, by accusing the Congress of planning to distribute wealth to Indian Muslims, and referring to Indian Muslims as "those with more children" amounted to egregious violation of the Constitution, the Representation of People's Act, 1951, and the Model Code of Conduct.

He further said that the "silence of the EC [on the issue] is deafening" and accused it of being complicit with the BJP.

DECCAN CHRONICLE

24 APR 2024

## SC directions on VVPAT likely today

New Delhi: The Supreme Court is expected to give its directions to the Election Commission of India on Wednesday on the petitions seeking 100 per cent verification of the votes recorded in the electronic voting machines (EVMs) with the Voter Verifiable Paper Audit Trail (VVPAT) slips. A bench comprising Justices Sanjiv Khanna and Dipankar Datta had reserved judgment on the petitions on April 18. The bench had extensive interaction the ECI on the working of the EVMs and VVPATs.

THE NEW INDIAN EXPRESS
24 APR 2024

# ₹4 crore seizure: Nainar's relative and staff appear before Tambaram police

**EXPRESS NEWS SERVICE**
@ Chennai

THREE persons including the staff and relative of Tirunelveli BJP candidate Nainar Nagendran appeared before the Tambaram police in connection with the ₹3.98 crore seizure from the Nellai Express train few days ago.

The police had last Sunday issued summons to Nainar Nagendran for inquiry this week, but the politician had sought more time to appear before the police.



The summons was issued after the seizure of ₹3.98 crore from three passengers of the train, one of whom is said to be a staff at Nagendran's hotel in Chennai. The summons was also issued to Nainar's relative, Murugan and assistants — Asai Thambi and Jaishankar.

On Tuesday, Murugan, Asai Thambi and Jaishankar appeared before the Tambaram police and they were questioned for nearly an hour, police said. They said the trio claimed innocence about the money seized from the train.

**Caught from train**

Three passengers of the Chennai-Tirunelveli Nellai Superfast Express were caught on April 6 by a team of officials comprising the election commission's flying squad and Tambaram police

Three passengers of the Chennai-Tirunelveli Nellai Superfast Express - Satish and S Naveen of Agaram in Chennai and S Perumal of Srivaikundam of Thoothukudi - were caught on April 6 by a team of officials comprising election commission's flying squad and Tambaram police following a tip-off about cash being carried in two-tier AC coach of the train.

THE NEW INDIAN EXPRESS
24 APR 2024

EXPRESS READ

## 'Grant leave for other state staff for polls'

Chennai: The labour department has issued directions to private firms to grant leave to their employees from neighbouring states on the polling day to enable them to cast their votes. According to a statement by Labour commissioner (in-charge) A Sundaravalli, private firms such as IT companies, commercial establishments, transport companies and public sector units which are operating in TN are requested to grant leave for the employees, who belong to Kerala, Andhra Pradesh and Karnataka on the polling day under the People Representative Act-1951, section 135(B). The employees can raise their grievance over non availing of holidays by dialling the state control room number: 044-24335107, 044- 24330354 and 044- 24322749 or the numbers of the district control room: 044-24330354, 044-24330354 and 044-24330354. ENS

இந்து தமிழ் திசை

24 APR 2024

வாக்களிக்க வசதியாக தமிழகத்தில் பணிபுரியும் அண்டை மாநில

# தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு வழங்க உத்தரவு

► கர்நாடகா, ஆந்திரா, கேரளாவில் அடுத்தடுத்து தேர்தல்

● சென்னை

தமிழக தொழிலாளர் ஆணையர் ஏ.சுந்தரவல்லி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மக்களவை பொதுத் தேர்தல் கேரளாவில் ஏப்.26-ம் தேதியும், ஆந்திராவில் மே 13-ம் தேதியும், கர்நாடகாவில் முதல்கட்டம் ஏப்.26-ம் தேதியும், 2-ம் கட்டமாக மே 7-ம் தேதியும் நடைபெறுகிறது.

தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கடைகள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் கர்நாடகா, கேரளா, ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் பணிபுரிகின்றனர்.

வாக்குரிமை உள்ள தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களும் அவர்கள் தம் சொந்த மாநிலத்துக்குச் சென்று வாக்களிக்க வேண்டியுள்ளது. இதற்கு ஏதுவாக தேர்தல் நாட்களில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் அவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும். தவறும் நிறுவனங்கள் மீது மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகளை தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

தொழிலாளர் இணை ஆணையர், மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர் தே.விமலநாதனை 944539880, 044-24335107 ஆகிய எண்களிலும், உதவி ஆணையர் சென்னை முதல் வட்டம் எம். வெங்கடாச்சலபதியை 7010275131, 044-24330354, 2-ம் வட்ட தொழிலாளர் உதவி ஆணையர் சுபாஷ்சந்திரனை 8220613777, 044-24322749, 3-ம் வட்ட உதவி ஆணையர் சிவக்குமாரை 9043555123, 044-4322750 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட கட்டுப்பாட்டறையில், முதல் வட்ட தொழிலாளர் துணை ஆய்வாளர் சி.விஜயலட்சுமியை 9840829835, 044-24330354, 6-ம் வட்ட துணை ஆய்வாளர் இ.ஏகாம்பரத்தை 9790930846, 044-24330354, 9-வது வட்ட துணை ஆணையர் ஆர்.வேதநாயகியை 9884264814, 044-24330354 எண்களிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அதேபோல், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மு.வெ.செந்தில்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா, ஆந்திராவில் வாக்குரிமை உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் வாக்களிக்க வசதியாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்காவிட்டால், இது தொடர்பான புகார்களை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணைஇயக்குநர்கள் எம்.வி.கார்த்திகேயன் - 9444221011, எஸ்.கமலக்கண்ணன் - 9884675712 என்ற எண்களிலும், இயக்குநர் அலுவலக ஆட்சி அலுவலர் எஸ்.சூரியாவிடம் 9884470526 என்ற எண்ணிலும், துணை இயக்குநர் கே.சுவேதாவிடம் 9962524442 என்ற எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம்.

மேலும், துணை இயக்குநர்கள் எஸ்.இளவரசன் (சென்னை மாவட்ட கட்டுப்பாட்டு அறை) - 7373278203, செங்கல்பட்டு ஜி.அசோக் - 9025155455, திருவள்ளூர் கே.திவ்யா - 9952000256, காஞ்சிபுரம் பா.பாலமுருகன் - 9443576011 என்ற எண்களிலும் புகார் அளிக்கலாம்.

All industrial workers including daily wage, temporary and contract workers ~~from other~~ who working in Tamil Nadu from other state. owners are instruct to grant leave with pay to facilitate voting in next phases

இந்து தமிழ் திசை

24 APR 2024

சொல்... பொருள்... தெளிவு

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்



மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) இந்தியாவில் பரவலான பயன்பாட்டுக்கு வந்து 20 ஆண்டுகள் ஆகின்றன. எனினும், ஒவ்வொரு தேர்தலின்போதும் வாக்குப்பதிவு இயந்திரத்தின் நம்பகத்தன்மை குறித்து விவாதங்கள் எழுகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளே மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தத் தயங்கிய நிலையில், உலகின் மிகப் பெரிய ஜனநாயகத் தேர்தல் நடைமுறையைக் கொண்டிருக்கும் இந்தியாவில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னணியில் சவால்களும் சர்ச்சைகளும் நிறைந்திருக்கின்றன.

**வாக்குச்சீட்டில் சிக்கல்:** மக்களவைத் தேர்தலைப் பொறுத்த வரை 2004 தேர்தலில்தான் வாக்குப்பதிவு இயந்திரம் முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு வரை வாக்குச்சீட்டு நடைமுறைதான் கடைப்பிடிக்கப் பட்டது. தேர்தல்களில் வாக்குச்சீட்டு முறையைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதில் சில சிக்கல்கள் இருந்தன. அதில் முதன்மையானது, காகிதங்கள் அச்சிடுவதற்கான செலவு; இரண்டாவது, வாக்கு எண்ணிக்கை வரை வாக்குச்சீட்டுகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

வாக்கு எண்ணிக்கையைப் பொறுத்தவரை, ஒவ்வொரு சீட்டாக எண்ணுவது மிகவும் சிக்கலான பணி. சில மாநிலங்களில் வாக்குச்சீட்டைப் பயன்படுத்தி கள்ள வாக்குகளும் அதிகம் போடப்பட்டன. கட்சி ஆதரவாளர்கள் வாக்குச்சாவடிகளுக்குள் புகுந்து வாக்குப்பெட்டிகளைக் களவாடிச் சென்ற சம்பவங்களும் நடந்தேறின. இந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டே வாக்குச்சீட்டு முறைக்கு மாற்றாக வாக்குப்பதிவு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**இவிஎம் வரலாறு:** முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.எல்.ஷாக்தர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான யோசனையை முன்மொழிந்தார். இதைத் தொடர்ந்து, பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம், இந்திய மின்னணுக் கழகத்துடன் இணைந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை உருவாக்கும் பணியில் இறங்கியது.

1982இல் கேரளத்தின் பரவூர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் முதல் முதலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. எனினும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரப் பயன்பாடு சட்டரீதியான சவாலை எதிர்கொண்டது. இந்நிலையில், 'தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது; அதனைப் பயன்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை' என உச்ச நீதிமன்றம் கூறியது; 1984இல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரப் பயன்பாட்டுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது.

**சட்டத்திருத்தம்:** 1989இல், ராஜிவ் காந்தி அரசு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் . 1951 வரைவில் திருத்தம் செய்து, தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்த அனுமதி அளித்தது. ஐஐடி மும்பை தொழிற்சாலை வடிவமைப்புத் துறையினரால் உருவாக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தேர்தல்களில் பயன்பாட்டுக்கு வந்தது.

1998இல் பரிசோதனை முயற்சியாக ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், டெல்லி உட்பட 25 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. 2001இல் தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. 2004 மக்களவைத் தேர்தலில்தான் நாடு முழுவதும் வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

**குற்றச்சாட்டுகளும் விவிபாட் அறிமுகமும்:** வாக்குப்பதிவு இயந்திரம் மீது நம்பகத்தன்மை இல்லை; வாக்குச்சீட்டு முறைக்கே மீண்டும் திரும்ப வேண்டும் என அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர். வாக்குப்பதிவு இயந்திரத்தைத் தடை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளும் தொடுக்கப்பட்டன. இதன் பின்னணியில், உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவில் ஒப்புகைச் சீட்டை (VVPAT) தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்தது. VVPAT (Voter Verifiable Paper Audit Trail) எனப்படும் ஒப்புகைச் சீட்டின் மூலம், வாக்காளர்கள் வாக்கைச் செலுத்தியவுடன் தாங்கள் வாக்களித்த வேட்பாளருக்கே தங்கள் வாக்கு பதிவாகியுள்ளதா என்பதைச் சரிபார்க்க முடியும்.

**பிற நாடுகளில்:** நமீபியா, நேபாளம், ஆர்மீனியா, வங்கதேசம், பூடான், ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பல்கேரியா, இத்தாலி, சுவிட்சர்லாந்து, கனடா, மெக்சிகோ, அர்ஜென்டினா, பிரேசில், சிலி, பெரு, வெனிசுவேலா ஆகிய நாடுகள் மின்னணு வாக்குப்பதிவு முறையைப் பயன்படுத்துகின்றன. இதில் 2014இல் நடந்த அதிபர் தேர்தலுக்கு நமீபியா, இந்தியாவின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைத் தங்கள் நாட்டின் தேர்தலுக்காகப் பயன்படுத்தியது.

ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா (பரவலாகப் பயன்பாட்டில் இல்லை என்றாலும் சில தேர்தல்களில் பயன்படுகிறது) உள்ளிட்ட பல நாடுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைத் தேர்தல்களில் பயன்படுத்துவதில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவும் இவிஎம் முறையில் வாக்களிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்கின்றன. கணினிகளை நம்ப முடியாது என்றும் வாக்குப்பதிவு இயந்திரங்களை மின்னணு முறையில் ஹேக்கிங் செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்நாடுகள் கருதுகின்றன.

இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானில் இவிஎம் முறை பயன்பாட்டில் இல்லை; வங்கதேசம் இவிஎம் பரிசோதனைகளில் இறங்கி, அதன் மீது உடன்பாடில்லாமல் மீண்டும் வாக்குச்சீட்டு முறையையே பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

ஜனநாயகத் தேர்தலில் மக்கள் செலுத்தும் வாக்கை உறுதிசெய்துகொள்வதற்கு அனைத்து உரிமையும் உண்டு. அந்த வகையில், ஒரு சட்டப்பேரவைத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்புகைச் சீட்டுகளை (VVPAT) மட்டும் எண்ணாமல், 100% ஒப்புகைச் சீட்டுகள் எண்ணப்பட வேண்டும் என்னும் கோரிக்கை வலுத்துவருகிறது. 100% ஒப்புகைச் சீட்டுகளைச் சரிபார்ப்பதற்குத் தேர்தல் ஆணையம் வழிவகை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரைவில் தீர்ப்பளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தொகுப்பு: இந்து குணசேகர்**

# தேர்தல் நடைமுறையில் தேவை மாற்றம்

இந்தியாவில் தற்போதுள்ள தேர்தல் முறையில், ஒரு தொகுதியில் யார் அதிகமான வாக்குகளைப் பெறுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுவர். இந்த முறையைப் பெரும்பாலான ஜனநாயக நாடுகள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்திய நடைமுறையை ஒத்த தேர்தல் முறையைப் பின்பற்றிக்கொண்டிருந்த நாடுகள் பலவும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைக்கு மாறிவிட்டன.

அமெரிக்கா தொடங்கி அண்டை நாடான இலங்கை வரை விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைதான். இந்த முறை பின்பற்றப்படுமானால் ஒடுக்கப் பட்ட மக்களுக்கும், மத, மொழி, சிறுபான்மைச் சமூகங்களுக்கும் சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் அவர்களுடைய மக்கள்தொகை விகிதத்துக்கு ஏற்பப் பிரதிநிதிகள் கிடைப்பார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளும் அறிஞர்களும் இந்த முறைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துவருகின்றனர்.

விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை இருந்திருந்தால், 5% வாக்கு வங்கி உள்ள கட்சி தமிழகச் சட்டமன்றத்தில் கிட்டத்தட்ட 11 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற முடியும். ஆனால், தற்போதுள்ள தேர்தல் முறையில், ஒவ்வொரு தேர்தலிலும் இத்தகைய கட்சிகளின் வாக்கு வங்கி சரிகிறது. சிறிய கட்சிகள் தனித்துப் போட்டியிடும்போது, வாக்குகளைச் சிதறடிக்கிறார்கள், பெரிய கட்சியின் 'பி டீம்' என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கு ஆளாகின்றன; இதில் உண்மையும் உண்டு.

தேர்தலில் தோல்வியடையும் கட்சிகள், 'தேர்தல் நடைமுறையில் மாற்றம் வேண்டும்; விகிதாச்சாரத் தேர்வு முறைதான் உண்மையான ஜனநாயகத்தை மீட்டெடுக்கும்' என்று பேசுவது வாடிக்கை. ஆனால், ஆட்சிக்கு வரும் கட்சிகள், இதைப் பரிசீலிப்பதே இல்லை. விகிதாச்சாரத் தேர்தல் முறை தொடர்பான விவாதங்களில் இம்மியளவுகூட முன்னேற்றம் இல்லை.

தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் வராத வரையில், சிறு கட்சிகள் தங்கள் கொள்கை–கோட்பாட்டுடன் செயல்படுவது இயலாத ஒன்று. தேர்தல் நடைமுறையில் மாற்றம் வந்தாக வேண்டியது காலத்தின் கட்டாயம். அறிவுத்தளத்தில் மட்டுமல்லாமல், பொதுத் தளத்திலும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை தொடர்பாக விவாதம் எழும்போது மட்டுமே இந்தக் குரலுக்கான வெற்றி கிடைக்கும்.

**புதுமடம் ஜாபர் அலி**

News regarding request of changes in Election process

தினத்தந்தி

24 APR 2024

## தேர்தல் கமிஷனில்

# பிரதமர் மோடிக்கு எதிராக ஜவாஹிருல்லா புகார்

புதுடெல்லி, ஏப்.24-

மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. நேற்று இந்திய தேர்தல் கமிஷன், தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் மற்றும் 2 தேர்தல் கமிஷனர்கள், ராஜஸ்தான் மாநில தலைமை தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு இ-மெயில் மூலம் மனு அனுப்பியுள்ளார். அதில் பிரதமர் மோடி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டு உள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா பகுதியில் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி, முஸ்லிம் மக்களை திசை திருப்பும் விதத்தில் பேசியதாகவும், இது வெறுப்புணர்வு பேச்சு என்றும் கூறியுள்ள அவர், பிரதமர் மோடியை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றும், அவர் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

News regarding complaint against Prime Minister Modi

தினத்தந்தி

24 APR 2024

ரூ.4 கோடி கைப்பற்றப்பட்ட விவகாரம்:

# தாம்பரம் போலீஸ் நிலையத்தில் நயினார் நாகேந்திரன் உறவினர் ஆஜர்

## வாக்குமூலம் அளித்தார்

தாம்பரம், ஏப்.24- சென்னை தாம்பரத்தில் ரூ.4 கோடி கைப்பற்றப் பட்ட விவகாரத்தில் தாம்பரம் போலீசார் அனுப்பிய சம்மனுக்கு, நயினார் நாகேந்திரன் உறவினர் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

### ரூ.4 கோடி ரொக்கப்பணம்

நாடாளுமன்ற தேர்தலை யொட்டி, கடந்த 6-ந் தேதி இரவு தேர்தல் பறக்கும் படை யினர் சென்னை தாம்பரம் ரெயில் நிலையத்தில் வந்து நின்ற நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் நடத்திய சோதனை யில் ரூ.4 கோடி ரொக்கப்ப ணம் பிடிபட்டது. பிடிபட்ட பணம் நெல்லை பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந் திரனுக்கு தேர்தல் செலவுக் காக வாக்காளர்களுக்கு கொடுக்க கொண்டு சென்ற தாக விசாரணையில் தெரிய வந்ததாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தாம்பரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து நயினார் நாகேந்திரன் ஓட்டலில் வேலை பார்த்த சதிஷ், பெருமாள் உள்பட 3 பேரை கைது செய்து தாம்ப ரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி னர். பின்னர் 3 பேரும் நிபந் தனை ஜாமீனில் விடுவிக்கப் பட்டனர்.

### போலீஸ் நிலையத்தில் ஆஜர்

இந்த வழக்கில் நயினார் நாகேந்திரன், ஆசைதம்பி, சென்னை அபிராமிபுரத்தை சேர்ந்த பா.ஜனதா மாநில தொழில்துறை பிரிவின் தலை வர் கோவர்தனன், பா.ஜனதா கட்சியை சேர்ந்த ஜெய்சங்கர், நவீன், பெருமாள் உள்ளிட் டோர் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகும் படி சம்மன் அனுப்பப்பட்டது. வழக்கு விசாரணைக்கு நேற்று முன்தி னம் நயினார் நாகேந்திரன் ஆஜராக வேண்டி இருந்த நிலையில், 10 நாள் அவகாசம் கேட்டு கடிதம் அளிக்கப்பட் டது.

அதனை தொடர்ந்து நேற்று ஆசைத்தம்பி, ஜெய்சங்கர் மற் றும் நயினார் நாகேந்திரனின் உறவினரான முருகன் ஆகி யோர் தாம்பரம் போலீஸ் நிலையத்திற்கு வந்து போலீஸ் உதவி கமிஷனர் நெல்சன், இன்ஸ்பெக்டர் பாலமுரளி சுந்தரம் ஆகியோர் முன்னி லையில் ஆஜரானார்கள்.

அப்போது அவர்கள் அளித்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இது தொடர் பாக நயினார் நாகேந்திரன் நேரில் ஆஜராக 2-வது சம்மன் அனுப்ப ஆலோசனை நடை பெற்று வருவதாகவும் போலீ சார் தெரிவித்தனர்.

Nayanar Nagendran's relative appeared and gave a statement to the summons sent by the Tambaram police in connection with the seizure of Rs. 4 crore in Chennai Tambaram.

தினமலர்

24 APR 2024

# அண்டை மாநில தொழிலாளர்களுக்கு தேர்தல் அன்று விடுப்பு வழங்க உத்தரவு

சென்னை, ஏப். 24–

'தமிழகத்தில் உள்ள நிறுவனங்கள், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலங்களில் ஓட்டுப்பதிவு நடக்கும் நாளில், அந்த மாநிலத் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும்' என, தொழிலாளர் நலத் துறை கமிஷனர் சுந்தரவல்லி உத்தரவிட்டுள்ளார்.

அவரது அறிக்கை:

கேரளாவில் 26ம் தேதி, கர்நாடகாவில் வரும் 26, மே 6 ஆகிய நாட்களில் லோக்சபா தேர்தல் நடக்க உள்ளது. ஆந்திராவில் மே 13 சட்டசபை மற்றும் லோக்சபா தேர்தல் நடக்கவுள்ளது.

தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில் நிறுவனங்கள், அனைத்து கடைகள், வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்.

பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலத் தொழிலாளர்கள், அவர்களின் மாநிலத்திற்கு சென்று ஓட்டளிக்க ஏதுவாக, அந்தந்த தேர்தல் நாட்களில், ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் நாட்களில், ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக, தமிழகத்தில் பணிபுரியும் சம்பந்தப்பட்ட மாநிலத் தொழிலாளர்கள் புகார் அளிக்க, மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மாநில கட்டுப்பாட்டு அறை

| அலுவலர் பெயர் மற்றும் பதவி | மொபைல் எண் | தொலைபேசி எண் |
|---|---|---|
| விமலநாதன், மாநில ஒருங்கிணைப்பாளர் | 94453 98801 | 044 24335107 |
| வெங்கடாச்சலபதி, உதவி ஆணையர் | 70102 75131 | 044 24330354 |
| சுபாஷ்சந்திரன், உதவி ஆணையர் | 82206 13777 | 044 24322749 |
| சிவகுமார், உதவி ஆணையர் | 90435 55123 | 044 24322750 |

## சென்னை மாவட்ட கட்டுப்பாட்டு அறை

| | | |
|---|---|---|
| விஜயலட்சுமி, துணை ஆய்வாளர் | 98408 29835 | 044 24330354 |
| ஏகாம்பரம், துணை ஆய்வாளர் | 97909 30846 | 044 24330354 |
| வேதநாயகி, துணை ஆய்வாளர் | 98842 64814 | 044 24330354 |

Orders to grant leave to workers of neighboring states on election day.

தினமலர்
24 APR 2024

# அதிக ஓட்டுப்பதிவில் கோவைக்கு மூன்றாமிடம்

## சிறப்பு அதிகாரி நியமித்து பட்டியல் சரிபார்க்க எதிர்பார்ப்பு

**கோவை, ஏப். 24–** தமிழக அளவில் அதிக வாக்காளர்கள் ஓட்டுப்பதிவு செய்த வகையில், கோவை லோக்சபா தொகுதி மூன்றாமிடம் பெற்றுள்ளது.

ஆனாலும், இரட்டை பதிவு, இடப்பெயர்ச்சி மற்றும் இறந்தவர்கள் பெயர் நீக்கம் செய்யாதது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் இருப்பதால், செயலர் அந்தஸ்தில் சிறப்பு அதிகாரி நியமித்து, பட்டியலை சரிபார்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

தமிழகத்தில் 19ம் தேதி லோக்சபா தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு நடந்தது. பதிவான ஓட்டுகளை தேர்தல் ஆணைய செயலியில் பதிவேற்றம் செய்வதில் ஏற்பட்ட குளறுபடியால், சதவீதம் வெளியிட்டதில் குழப்பம் ஏற்பட்டது.

இறுதியாக வெளியிட்ட பட்டிலின்படி, 69.72 சதவீதம் ஓட்டுப்பதிவாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதில், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில், 14 லட்சத்து, 35,243 ஓட்டுகள் பதிவாகி, மாநில அளவில் முதலிடத்தில் உள்ளது. இதேபோல், 14 லட்சத்து, 30,738 ஓட்டுகள் பதிவாகி, திருவள்ளூர் தொகுதி இரண்டாமிடம்; 13 லட்சத்து, 66,597 ஓட்டுகள் பதிவாகி, கோவை தொகுதி மூன்றாமிடம் பெற்றிருக்கிறது.

### வாக்காளர்கள் அதிகம்

மாநில அளவில் ஸ்ரீபெரும்புதூர், கோவை, திருவள்ளூர் மற்றும் தென்சென்னை ஆகிய தொகுதிகளில் வாக்காளர்கள் எண்ணிக்கை, 20 லட்சத்தை கடந்திருக்கிறது. ஸ்ரீபெரும்புதூரில் மட்டும், 23 லட்சத்து, 82,119 வாக்காளர்கள் இருக்கின்றனர்.

கோவையில், 21 லட்சத்து, 6,124 வாக்காளர்கள் உள்ளனர். அதேநேரம், ஓட்டுப்பதிவில் மற்ற தொகுதிகளை காட்டிலும், அதிகமானோர் இத்தொகுதிகளில் ஓட்டளித்திருப்பது ஆய்வில் தெரிய வந்தது.

பட்டியலில் ஒரே வாக்காளருக்கு இரு இடங்களில் ஓட்டுரிமை இருப்பது; இடப்பெயர்ச்சி அடைந்திருப்பது; இறந்தவர்கள் பெயர்களை நீக்காமல் இருப்பது போன்ற காரணங்களால், எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தி, 100 சதவீதம் தவறில்லாத பட்டியல் தயாரித்தால், மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை பெரிய அளவில் குறையும்.

### வாக்காளர்களே இல்லை

ஏனெனில், தேர்தல் ஆணையம் இறுதி பட்டியல் வெளியிட்ட பின், கோவையில் அரசியல் கட்சியினர், பூத் வாரியாக சென்று வாக்காளர்கள் விபரத்தை சரிபார்த்த போது, ஒரு பூத்தில், 1,000 வாக்காளர்கள் இருப்பதாக பட்டியலில் பெயர்கள் இருந்தன; தேர்தல் பிரசாரத்துக்கு வீடு வீடாக சென்றபோது, அப்பகுதியில் 600 வாக்காளர்களே இருந்தது கண்டறியப்பட்டது.

மீதமுள்ள 400 வாக்காளர்களின் நிலை தெரியவில்லை. தேர்தல் பிரிவினர் கள ஆய்வு செய்யாமல் பட்டியல் தயாரித்திருப்பது, இதன் மூலம் தெரியவந்துள்ளது.

உதாரணத்துக்கு, கோவை வடக்கு தொகுதியில், 230 ரங்கநாதர் வீதியில், 368 வாக்காளர்கள் இருப்பதாக பட்டியலில் இருக்கிறது. அவ்வீதியில் தற்சமயம் 73 வாக்காளர்களே வசிக்கின்றனர். 68 வாக்காளர்கள், 2 கி.மீ., சுற்றளவுக்கு உள்ள வீடுகளுக்கு இட பெயர்ச்சி அடைந்திருக்கின்றனர்; 33 வாக்காளர்கள் இறந்து விட்டனர்.

நான்கு வாக்காளர்களின் பெயர்கள் இரட்டை பதிவாக இருந்தது. 190 வாக்காளர்கள் எங்கே இருக்கின்றனர் என்றே தெரியவில்லை.

இது தொடர்பாக, தேர்தல் பிரிவில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. அலுவலர்கள் நேரடியாக வீடு வீடாக ஆய்வு செய்து பட்டியல் தயாரிக்காததே, இது போன்ற தவறுகளுக்கு காரணம்.

### சிறப்பு அதிகாரி அவசியம்

இம்முறை, 100 சதவீதம் ஓட்டுப்பதிவை வலியுறுத்தி, தீவிரமாக விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்ட தேர்தல் ஆணையம், 100 சதவீதம் தவறில்லாத வாக்காளர் பட்டியல் தயாரிக்க தவறிவிட்டது என்பதே உண்மை. இதற்கு தீர்வு காண, செயலர் அந்தஸ்தில் சிறப்பு அதிகாரி நியமித்து, விசாரணை செய்ய வேண்டும்.

ஓட்டு சேகரிக்கச் சென்ற இடங்கள் மற்றும் ஓட்டுப்பதிவு குழப்பங்களை அனுபவப்பூர்வமாக பெறும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் ஆலோசனை பெற வேண்டும். மூன்று அல்லது ஆறு மாதங்கள் அவகாசம் கொடுத்து, பூத் வாரியாக மீண்டும் வாக்காளர்கள் விபரங்களை கள ஆய்வுக்கு உட்படுத்தி, இறுதி பட்டியல் தயாரிக்க வேண்டும்.

அப்பட்டியல் நகலை கட்சியினருக்கு வழங்கி, அவற்றின் உண்மை தன்மையை சரிபார்க்க வேண்டும். ஆதார் எண்ணை இணைத்து, ஒரு வாக்காளருக்கு ஓரிடத்தில் மட்டுமே ஓட்டுரிமை என்பதை இறுதி செய்ய வேண்டும்.

பரீட்சார்த்த முறையில், 20 லட்சத்துக்கு மேல் அதிக வாக்காளர்கள் உள்ள ஸ்ரீபெரும்புதூர், கோவை, திருவள்ளூர் மற்றும் தென்சென்னை ஆகிய தொகுதிகளில் பட்டியல் சரிபார்ப்பு பணி மேற்கொள்ள, தேர்தல் ஆணையம் முன்வர வேண்டும்.

இல்லையெனில், 2026 சட்டசபை தேர்தலிலும் இது போன்ற குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது; 100 சதவீத ஓட்டுப்பதிவு என்கிற தேர்தல் ஆணையத்தின் பிரசாரம் வெற்றுக்கோஷமாகவே ஒலித்துக் கொண்டிருக்கும்.

Coimbatore is in third place in highest Voter turnout.

தினகரன்

24 APR 2024

அண்டை மாநில தொழிலாளர்கள்

# தேர்தலில் வாக்களிக்க ஊதியத்துடன் விடுப்பு

## தொழிலாளர் நலத்துறை உத்தரவு

சென்னை, ஏப்.24: தமிழ்நாடு வேலைவாய்ப்பு, பயிற்சித் துறை மற்றும் தொழிலாளர் ஆணையர் சுந்தரவல்லி வெளியிட்ட அறிக்கை:

நாடாளுமன்ற தேர்தல் கடந்த 19ம் தேதி தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்துள்ளது. இரண்டாம் கட்டமாக அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களிலும், கேரளாவில் வரும் 26ம் தேதியும், கர்நாடகாவில் முதற்கட்டமாக வரும் 26ம் தேதி, இரண்டாம் கட்டமாக மே 7ம் தேதியும், ஆந்திராவில் மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல்கள் மே 13ம் தேதியும் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களில் வாக்குரிமை உள்ள தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சொந்த மாநிலத்திற்கு சென்று வாக்களிக்க ஏதுவாக மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, 135(பி)ன் கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தேர்தல் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக அந்த மாநிலங்களில் ஓட்டுரிமை உள்ள தொழிலாளர்கள் புகார் அளிக்க ஏதுவாக தொழிலாளர் துறை சார்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் சென்னை மாவட்டக் கட்டுப்பாட்டு அறை விவரங்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

| மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அலுவலர் பெயர் மற்றும் பதவி | கைபேசி எண் | தொலைபேசி எண் |
|---|---|---|
| விமலநாதன், தொழிலாளர் இணை ஆணையர்-1, மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர் | 9445398801 | 044-24335107 |
| வெங்கடாச்சலபதி, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), முதல் வட்டம், சென்னை | 7010275131 | 044-24330354 |
| சுபாஷ்சந்திரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), இரண்டாம் வட்டம், சென்னை | 8220613777 | 044-24322749 |
| சிவக்குமார், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), மூன்றாம் வட்டம், சென்னை | 9043555123 | 044-24322750 |

மாவட்ட கட்டுப்பாட்டு அறை (சென்னை மாவட்டம்)

| மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் பெயர் மற்றும் பதவி | கைபேசி எண் | தொலைபேசி எண் |
|---|---|---|
| விஜயலட்சுமி, தொழிலாளர் துணை ஆய்வாளர், 1வது வட்டம், சென்னை | 9840829835 | 044-24330354 |
| ஏகாம்பரம், தொழிலாளர் துணை ஆய்வாளர், 6வது வட்டம், சென்னை | 9790930846 | 044-24330354 |
| வேதநாயகி, தொழிலாளர் துணை ஆய்வாளர், 9வது வட்டம், சென்னை | 9884264814 | 044-24330354 |

Orders to grant leave to workers of neighboring states on election day

தினகரன்
24 APR 2024

நாடாளுமன்ற கடைசி கட்ட தேர்தலுடன்

# விக்கிரவாண்டி தொகுதிக்கு ஜூனில் இடைத்தேர்தல்?

## விரைவில் அறிவிப்பு

விக்கிரவாண்டி, ஏப்.24: நாடாளுமன்ற தேர்தலுடன் நாடாளுமன்ற கடைசிகட்ட தேர்தலுடன் விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கான அறிவிப்பு ஒரு சில நாட்களில் வெளியாகலாம் என்று கூறப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருந்த புகழேந்தி, உடல்நலக்குறைவு காரணமாக கடந்த 6ம் தேதி உயிரிழந்தார். இதனை தொடர்ந்து 8ம் தேதி விக்கிரவாண்டி தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. பொதுவாகவே ஒரு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ உயிரிழந்தாலோ அல்லது ராஜினாமா செய்தாலோ 6 மாதத்துக்குள் இடைத்தேர்தல் நடத்தப்படும். அந்த வகையில் தற்போது இந்தியா முழுவதும் நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இதில் ஒரே கட்டமாக கடந்த 19ம் தேதி தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் நடந்து முடிந்தது. இந்நிலையில் கடைசி கட்ட நாடாளுமன்ற தேர்தல் ஜூன் 1ம் தேதி நடக்கிறது. இத்தேர்தலோடு தற்போது விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தலையும் சேர்த்து நடத்த இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கான அறிவிப்பை ஒரு சில நாட்களில் தேர்தல் ஆணையம் வெளியிடும் என்று கூறப்படுகிறது.

இதனால் அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியில் தொடங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

Announcement soon for bye-election to Vikravandi AC along with last phase of parliamentary Election

தினகரன்
24 APR 2024

### வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கிறதா, இல்லையா விவகாரம்

# அரசியல் கட்சிகளுக்கு தான் அதிக பொறுப்பு உள்ளது

### முன்னாள் தேர்தல் ஆணையர் கோபால்சாமி கருத்து

சென்னை, ஏப். 24: வாக்காளர் பட்டியலில் ஒருவரின் பெயர் இருக்கிறதா, இல்லையா? என்ற விவகாரத்தில் அரசியல் கட்சிகளுக்குத்தான் அதிக பொறுப்பு இருப்பதாகவும், பொதுமக்களும் முன் கூட்டியே பட்டியலில் பெயர் உள்ளதா என்று பரிசோதனை செய்திருக்க வேண்டும் என்றும் முன்னாள் தேர்தல் ஆணையர் கருத்து தெரிவித்தார்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 நாடாளுமன்ற தொகுதிக்கான தேர்தல் ஒரே கட்டமாக கடந்த 19ம் தேதி (வெள்ளி) நடந்து முடிந்தது. இந்த தேர்தலில் 6.23 கோடி பேர் வாக்களிக்க தகுதியுள்ளவர்கள். இவர்களில் 69.72 சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்தனர். அதன்படி சுமார் ஒரு கோடியே 90 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை. இது தமிழகத்தில் தற்போது பரபரப்பாக பேசும் பொருளாக உருவாகியுள்ளது.

இது கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்கு சதவீதத்தை விட 2.31 சதவீதம் குறைவு. ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வாக்கு சதவீதம் குறைந்ததற்கு வெள்ளிக்கிழமை வாக்குப்பதிவு என்பதால் பலரும் வெள்ளி, சனி, ஞாயிறு வெளியூர் அல்லது சுற்றுலா சென்றது காரணமாக கூறப்படுகிறது. மேலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் வாக்கு சதவீதம் குறைந்திருக்கலாம் என்கின்றனர். இதுதவிர முக்கிய காரணமாக, தமிழகம் முழுவதும் பரவலாக சென்னை, கோவை உள்ளிட்ட பல நகர்ப்புற பகுதிகளில் வாக்காளர் அடையாள அட்டை இருந்தும் பலரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்ற புகார் கூறப்படுகிறது. இதில் ஒரு சில பகுதிகளில் மொத்தம் மொத்தமாக நீக்கப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. இதுவும் வாக்குப்பதிவு குறைவுக்கு ஒரு காரணம் என கூறப்பட்டது. ஆனால் இதை தலைமை தேர்தல் அதிகாரி மறுத்தார்.



இந்த குளறுபடிகளுக்கும் காரணம் தேர்தல் ஆணையமா, அரசியல் கட்சிகளா, பொதுமக்களா? என்று முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி கோபால்சாமியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

இதுபோன்ற தவறுகளுக்கு எல்லோருமே பொறுப்பு ஏற்க வேண்டும். தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் வெளியிடும்போது, யார் யார் பெயர் நீக்கப்பட்டுள்ளது, யார் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்று விரிவாக அரசியல் கட்சிகளுக்கு தெரிவிக்கிறது. தேர்தல் ஆணையம் வழங்கும் பட்டியலை வாங்கி பழைய பேப்பர் கடைக்கு போட வைத்திருக்கிறார்களா அல்லது அதை பயன்படுத்த வைத்திருக்கிறார்களா? தேர்தல் ஆணையமும், ஒருவரின் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கும்போது ஒரு தடவைக்கு இரண்டு தடவை சரிபார்க்க வேண்டும். அதை தேர்தல் ஆணையம் கவனமுடன் கையாள வேண்டும். அரசியல் கட்சிகளும், தேர்தல் ஆணையம் அளிக்கும் பட்டியலை வைத்து வீடு வீடாக ஆய்வு செய்திருக்க வேண்டும். தேர்தல் நடந்து முடிந்த பிறகு பெயரை நீக்கி விட்டார்கள் என்று மட்டுமே சொல்வது அரசியல் கட்சிகள் வேலை இல்லை. பொதுமக்களும், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று தேர்தலுக்கு முன்பே பார்த்து உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

பெயர் நீக்கியதற்கான காரணம், நம்பர் ஒன் பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு இருக்கிறது என்றால், நம்பர் 2 பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கு இருக்கிறது. ஓட்டு போடும் அன்று, கையில் பட்டியலை வைத்துக் கொண்டு ஒவ்வொருவரும் வந்தார்களா, இல்லையா? என்று பார்க்கிறீர்கள். அப்படியென்றால் அவர்கள் இருக்கிறார்களா, இல்லையா? என்று தேர்தலுக்கு முன் அரசியல் கட்சியினர் பார்த்திருக்க வேண்டும். பெயர் இருக்கிறவர்கள் தான் ஓட்டு போட வருவார்கள். அப்படியென்றால் பெயர் இருக்கிறதா என்று முன்பே பார்த்திருக்க வேண்டும். இதுபோன்ற பிரச்னைகள் இனி வராமல் இருக்க வேண்டும் என்றால் தேர்தல் ஆணையம், அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அவரவர் வேலையை சரியாக செய்ய வேண்டும். ஒரு தடவை வாக்காளர் அடையாள அட்டை வாங்கி விட்டால் அந்த கார்டு எப்போதும் நம்மிடம் தான் இருக்கும். ஆனால் வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கிறதா என்று பார்ப்பதுதான் முக்கியம். அதனால் இதில் அனைவருக்கும் பொறுப்பு இருக்கிறதை மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு கூறினார்.

Former Election commissioner Gopalswamy said that the Political parties have more responsibilities for the issue of names ~~in~~ of the electors in the Electoral roll

தினகரன்

24 APR 2024

# மோடி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி கமிஷனரிடம் புகார்

சென்னை, ஏப். 24: தேர்தல் அரசியலுக்காக சிறுபான்மை முஸ்லிம்கள் குறித்து பிரதமர் மோடி வெறுப்பு பிரசாரம் செய்வதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை போலீஸ் கமிஷனரிடம் எஸ்டிபிஐ கட்சி சார்பில் நேற்று புகார் அளிக்கப்பட்டது.

எஸ்டிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் முகமது ரஷீத், மத்திய சென்னை வடக்கு மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.வி.ராஜா, செயலாளர் பாண்டித்துரை, மத்திய சென்னை தெற்கு மாவட்ட தலைவர் சலீம் ஜாபர் ஆகியோர், சென்னை கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனுவை அளித்தனர்.

News regarding complaints against pm modi

தினகரன்

24 APR 2024

₹4 கோடி சிக்கிய வழக்கில்

# நயினார் நாகேந்திரனின் ஓட்டல் ஊழியர் 3 பேர் போலீசில் ஆஜர்

சென்னை, ஏப்.24: சென்னையில் இருந்து நெல்லைக்கு கடந்த 6ம்தேதி இரவு சென்ற நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்காக கொண்டு செல்லப்பட்ட ₹4 கோடி பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அளித்த வாக்குமூலம் அளித்ததின் அடிப்படையில் நயினார் நாகேந்திரனுக்கு தாம்பரம் காவல் நிலையத்தில் பணியாற்றும் காவலர் ஒருவர் மூலம் சம்மன் அனுப்பப்பட்டது.

இந்த வழக்கில் ஆசைதம்பி, முருகன், சென்னை அபிராமிபுரத்தை சேர்ந்த பாஜ மாநில தொழில் துறை பிரிவின் தலைவர் கோவர்தனன், தாம்பரம் பாஜ நிர்வாகியும், கட்டுமான நிறுவன உரிமையாளருமான ஜெய்சங்கர் ஆகியோரும் பணத்தை நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் கொண்டு வந்த சதீஷ், நவீன், பெருமாள் ஆகிய 8 பேரும், ஒரு வாரத்திற்குள் தாம்பரம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இதில் நயினார் நாகேந்திரன் ஆஜராக 10 நாள் அவகாசம்கேட்டு வழக்கறிஞர் மூலம் கடிதம் கொடுத்து அனுப்பி இருந்தார். இதையடுத்துஅவரது ஓட்டல் ஊழியர்கள் ஆசைதம்பி, ஜெய்சங்கர், முருகன் ஆகியோர் தாம்பரம் காவல் நிலையத்தில் உதவி ஆணையர் நெல்சன், ஆய்வாளர் பால முரளி சுந்தரம் ஆகியோர் முன் ஆஜராகினர். முருகனிடம் 50க்கும் மேற்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டது. ஆசைதம்பி, ஜெய்சங்கர் ஆகிய 2 பேரையும் தான் அனுப்பி வைத்ததாகவும், ஆனால் பணம் குறித்து எதுவும் தெரியாது எனவும் அவர் வாக்குமூலத்தை எழுத்து பூர்வமாக எழுதிக் கொடுத்து சென்றுள்ளார்.

இது தொடர்பாக நயினார் நாகேந்திரன் நேரில் ஆஜராக 2வது சம்மன் அனுப்ப ஆலோசனை நடைபெற்று வருவதாகவும் போலீசார் தரப்பில் தெரிவித்தனர்.

Nayanar Nagendran's relatives appeared and gave statement regarding seizure of Rs-4 crore

தினகரன்

24 APR 2024

கள்ள ஓட்டு போட முயற்சி

# பாஜ நிர்வாகிக்கு பளார்..பளார்.. அதிமுக பிரமுகர் மீது தாக்குதல்

## 10க்கும் மேற்பட்டோர் மீது வழக்குப்பதிவு

விருத்தச்சாலம், ஏப். 24: கள்ள ஓட்டு போட முயற்சித்த விவகாரத்தில் பாஜ நிர்வாகியை கண்ணத்தில் அறைந்த அதிமுக பிரமுகரை வீடு புகுந்து பாஜவினர் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதுதொடர்பாக இருதரப்பிலும் அளிக்கப்பட்ட புகாரின்பேரில் 10க்கும் மேற்பட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை அடுத்த குருவன்குப்பம் ரோட்டு தெருவை சேர்ந்த ராமசாமி மகன் மணிகண்டன்(38). பாஜ ஒன்றிய பொருளாளர். அதே ஊரை சேர்ந்த கோவிந்தசாமி மகன் தேவேந்திரன் (53). அதிமுக உறுப்பினர். நடந்து முடிந்த மக்களவை தேர்தலின் போது, தேவேந்திரனின் உறவினர் முருகன் மகன் மூலம் வெளிநாட்டில் உள்ள ஒருவரின் ஓட்டை போடச் சென்றபோது, அதனை இளையபெருமாள் மகன் பாஜ ஒன்றிய செயலாளர் மணிகண்டன் தேர்தல் அலுவலரிடம் புகார் தெரிவித்து தடுத்துள்ளார்.

அப்போது இரு தரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதில் தேவேந்திரன் உறவினர் செல்வக்குமார் மணிகண்டனை கன்னத்தில் அறைந்துள்ளார். இதில் ஆத்திரமடைந்த மணிகண்டன் உறவினர்களான ராமசாமி மகன்கள் ராஜாராமன், ராஜேந்திரன், வீரபத்திரன் உள்ளிட்டோர் சேர்ந்து, தேவேந்திரன் வீட்டிற்குள் நுழைந்து, அங்கிருந்த பொருட்களை உடைத்து சேதப்படுத்தினர். அதில் தேவேந்திரன், அவரது மனைவி கற்பகவல்லி, மகள் ராணி, பேத்தி ஆகியோர் காயமடைந்து, விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்து தேவேந்திரன் கொடுத்த புகாரின் பேரில் பாஜ ஒன்றிய செயலாளர் இளையபெருமாள் மகன் மணிகண்டன், ஒன்றிய பொருளாளர் ராமசாமி மகன் மணிகண்டன், ஏழுமலை, எழில் மற்றும் சிலர் மீதும், பாஜ ஒன்றிய பொருளாளர் மணிகண்டன் கொடுத்த புகாரின் பேரில், அதிமுக வடக்கு ஒன்றிய செயலாளர் வேல்முருகன், அவரது மனைவி சின்னபொண்ணு, ஆதரவாளர்கள் செல்வகுமார், தேவேந்திரன், ராஜவேல், அகிலரசன் ஆகியோர் மீதும் ஆலடி போலீசார் வழக்குப்பதிவு செய்து தேடி வருகின்றனர்.

News regarding MCC violation.